**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 527/2022**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : மகேஷ்வரி | Caste | : |
| Father 's Name | : க/பெ.குருசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**13.06.2025**
**முதல் விசாரணை**

நான் கண்டுக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன குருசாமி எனது கணவர் ஆவார். எனது கணவர் சிப்கோவில் பணி செய்து வந்தார். கடந்த 2022 வது வருடம் தேதி மாதம் நினைவு இல்லை. ஒரு நாள் காலை 7மணியளவில் எனது கணவர் வேலைக்கு செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சென்றார். திருமங்கலம் மதுவிலக்கு காவல் நிலையம் அருகே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி எனது கணவர் சென்று கொண்டிருந்த போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த லாரியானது எனது கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. மதுவிலக்கு போலிசார் வந்து எனது வீட்டிற்கு வந்து தகவல் கூறி என்னை சம்பவயிடத்திற்கு என்னை அழைத்து சென்றார்கள். நான் எனது கணவரை பார்த்த போது எனது கணவர் வலிக்கு வலிக்கு என சொல்லி கூறினார். எனது கணவருக்கு வலதுபக்க கால் துண்டாகிவிட்டது. வலதுபுற புஜம் உடைந்துவிட்டது. 108 ஆம்புலன்சு மூலம் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். அங்க இருந்து மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அரஜ ராஜாஜி மருத்துவமனையில் எனது கணவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். விபத்து ஏற்படுத்திய காரின் ஓட்டுனரை எனக்கு தெரியாது. என்னிடம்

காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடைய கையெழுத்து தான். மேற்படி புகார் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மதுவிலக்கு போலிசார் எனக்கு சொல்லிய பிறகுதான் சம்பவம் பற்றி தெரியும் என்றால் சரிதான். எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது. நான் நேரடியாக அரசு மருத்துவமனையில் எனது கணவரை பார்த்தேன் என்றால் சரிதான். அங்கு அவரது நிலை சரியில்லாததால் அவரை மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். மறுநாள் தான் எனது கணவர் உடம்புடன் ஊருக்கு திரும்பினேன். அதுவரை நான் திருமங்கலம் வரவில்லை. மதுரை அரசு மருத்துவமனையில் வைத்து தான் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். அதில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. எங்கள் ஊருக்கு செல்லவேண்டும் என்றால் மதுவிலக்கு காவல் நிலையத்தை தாண்டி செல்லவேண்டும் என்றால் சரிதான். மதுவிலக்கு காவல் நிலையத்திற்கு மேற்கேயும் கிழக்கேயும் வளைவான ரோடு உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து எங்களது ஊர் சுமார் 1 கி.மீ இருக்கும். இந்த விபத்திற்கு எதிரியின் கவனக்குறைவு காரணம் இல்லை. எனது கணவர் காரணம் என்று சொன்னால் சரியல்ல. விபத்து காப்பீட்டிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 527/2022**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : அலெக்ஸ்பாண்டியன் | Caste | : |
| Father 's Name | : த/பெ.குருசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**13.06.2025**
**முதல் விசாரணை**

நான் கண்டுக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக்காக பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன குருசாமி எனது அப்பா ஆவார். கடந்த 09.03.2022 அன்று காலை 7 – 8 மணியளவில் மதுவிலக்கு காவல் நிலையம் அருகில் அங்கு எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டது என சம்பவயிடத்தில் உள்ளவர்கள் எனக்கு போன் மூலமாக தகவல் கூறினார்கள். சம்பவயிடத்திற்கு நான் சென்று பார்த்தபோது எனது அப்பா மயக்க நிலையில் இருந்தார். அப்பாவிற்கு வலதுகால் துண்டாகி இருந்தது. ஆம்புலன்சு மூலமாக திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டுசென்றோம். அங்கு இருந்து மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அன்று மதிய நேரம் சிகிச்சை பலனின்றி எனது அப்பா இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள். எனது அப்பா கப்பலுர் சிட்கோவில் தறி ஓட்டும் பணி செய்து வந்தார். சம்பவத்தன்று எனது அப்பா வேலைக்காக சிப்கோவை நோக்கி Hero Honda இருசக்கர வாகனத்தில் மதுவிலக்கு காவல் நிலையம் அருகே சென்ற போது எதிர்புறத்தில் வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனர் பற்றி எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தமாக எனது அம்மா புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். உசிலம்பட்டி டு திருமங்கலம் செல்லக்கூடிய ரோடு ஒரு வண்டி போனால் ஒரு வண்டி எதிரே வரக்கூடிய ஒற்றை ரோடு என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்த போது எனது அப்பாவை திருமங்கலம் அரசு மருத்துவமனை சென்று தான் பார்த்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான் விபத்து சம்பந்தமாக எனது தாயாரிடம் தான் போலிசார் விசாரித்தார்கள். என்னை விசாரிக்கவில்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 527/2022**

**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : அருண் | Caste | : |
| Father 's Name | : த/பெ.குருசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**13.06.2025**
**முதல் விசாரணை**

நான் கண்டுக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் Building elevation –ல் பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன குருசாமி எனது அப்பா ஆவார். கடந்த 09.03.2022 அன்று காலை 7 மணியளவில் கப்பலுர் சிப்கோவுக்கு வேலைக்கு செல்வதற்காக எனது அப்பா Hero Honda என்ற இருசக்கர வாகனத்தில் செல்லும் மதுவிலக்கு காவல் நிலையம் அருகில் எனது அப்பா வந்து கொண்டிருந்த போது எதிர்புறத்தில் வந்து அசோக் லேலேண்ட் என்ற லாரியானது மோதி விபத்து ஏற்பட்டது என ராமர் என்பவர் எனக்கு போனில் தகவல் கூறினார். திருமங்கலம் அரசு மருத்துவமனை சென்று எனது அப்பாவை பார்த்த போது எனது அப்பாவிற்கு வலதுபக்க கால் முட்டிக்கு கீழே துண்டாகி இருந்தது. வலதுபக்க கை உடைந்திருந்தது. உயிர் தளத்தில் காயம் இருந்தது. அங்கு இருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அன்று மதிய நேரம் 12.30 மணி நேரம் இருக்கும். சிகிச்சை பலனின்றி எனது அப்பா இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனர் பற்றி எனக்கு தெரியாது. தூத்துக்குடியை சேர்ந்தவர் என்ற விபரம் மட்டும் எனக்கு தெரியும். விபத்து சம்பந்தமாக எனது அம்மா புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். உசிலம்பட்டி டு திருமங்கலம் செல்லக்கூடிய ரோடு ஒரு வண்டி போனால் ஒரு வண்டி எதிரே வரக்கூடிய ஒற்றை ரோடு என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்த போது எனது அப்பாவை திருமங்கலம் அரசு மருத்துவமனை சென்று தான் பார்த்தோம். விபத்து சம்பந்தமாக போலிசார் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை வந்து என்னிடம் தான் புகார் மனுபெற்றார்கள். அதை வைத்து தான் முதல் தகவல் அறிக்கை தயார் செய்தார்கள் என்றால் சரிதான். இறந்துபோன எனது தகப்பனார் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.